உம்முடைய வசனமே சத்தியம். யோவான் 17:17

# அந்நிய பாஷை, அற்புத அடையாளங்கள், தரிசனம் பார்த்தல், தீர்க்கதரிசனம் உரைத்தல்

## பாடம் - 49



## வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

## பாடம் : # 49

## அந்நிய பாஷை, அற்புத அடையாளங்கள், தரிசனம் பார்த்தல், தீர்க்கதரிசனம் உரைத்தல்

**உங்கள் கவனத்திற்கு : ஒவ்வொரு வசனக்குறிப்பையும், தயவுசெய்து உங்கள் வேதாகமத்திலிருந்து முழுமையாக வாசித்தறியவும்.**

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே!

இன்று நாம், இன்றைய கிறிஸ்தவர்களுக்கு மத்தியில் பிரபலமாகக் கருதப்படுகிற தலைப்பை குறித்து தியானிக்க இருக்கிறோம்.

**ஆம், அது அந்நிய பாஷை, அற்புத அடையாளங்கள், தரிசனம் பார்ப்பது மற்றும் தீர்க்கதரிசனம் உரைப்பது பற்றின தலைப்பாகும்.**

இன்றைய கிறிஸ்தவ தொலைக்காட்சி அலைவரிசைகளில் மிக அதிகமாக நாம் காண்கிறதாக இது இருக்கிறது. ஆம், இவையனைத்தும் **"பரிசுத்த ஆவியின் வரங்கள்"** என்றழைக்கப்படுகிறது.

இதைக் குறித்து இப்பொழுது நாம் வாசிக்கலாம்,

**1 கொரிந்தியர் 12 : 7 - 11**

**"ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது. எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும்,**

**வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும், வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும் வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதலும் அளிக்கப்படுகிறது, இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்."**

இது, பரிசுத்த ஆவியின் "**வரங்கள்**" அல்லது "**வெளிப்பாடுகளைக்**" குறித்து பேசுகிற வசனப் பகுதியாகும்.

இந்த பலவகையான "வெளிப்பாடுகளில்", அந்நிய பாஷை பேசுவதும், அற்புத அடையாளங்கள் செய்வதும், குணமாக்கும் வரங்களும்,

**பெந்தெகொஸ்தே சபை**


என்று அழைக்கப்படுகிற கிறிஸ்தவ பிரிவின் மூலம் இன்று மிகவும் பிரபலமடைந்திருக்கிறது.

இந்த பெந்தெகொஸ்தே சபை பிரிவானது மிகவும் புதிதான கிறிஸ்தவ பிரிவாகும். இது பெந்தெகொஸ்தே நாளில் அப்போஸ்தலர்கள் பெற்ற அனுபவங்களை அடிப்படையாக கொண்டு கிபி 1890 / களில் துவங்கியது.



**இதன் காரணமாகவே, அவர்கள் இந்த பெயரினால் அழைக்கப்படுகிறார்கள்.**

ஆனால், இங்கு நாம் கவனிக்கவேண்டியதொன்று இருக்கிறது. இன்றைய சபைகளில் வெளிப்படுகிற அந்நிய பாஷை பேசுவது மற்றும் அற்புத அடையாளங்கள் செய்வதென்பது, முதலாம் நூற்றாண்டு முதல் கிட்டத்தட்ட 1700 வருட சபை சரித்திரத்தில் முற்றிலும் காணாமல் போயிருந்ததாகும்.



**அப்படியிருக்க, இந்த "பரிசுத்த ஆவியின் வரங்கள்" திடீரென தோன்றியிருப்பது எதைக் குறிக்கிறது ?**

**இவைகளைக் குறித்து வேத வசனங்கள் போதிப்பது என்ன ?**

ஆம், இப்பொழுது நாம் இவைகளைக் குறித்து ஒவ்வொன்றாகக் காண்போம்.

## அந்நிய பாஷை பேசுதல்

இது **"பரிசுத்த ஆவியின் வெளிப்பாடுகளில்"** ஒன்றாகவும், பெந்தெகொஸ்தே நாளில் திடீரென்று பெற்ற வல்லமையான, "பலவித" அல்லது பலவகையான பாஷைகளில் பேசுவதை **(1 கொரிந்தியர் 12 : 10)** உள்ளடக்கியதாக நாம் வாசிக்கிறோம்.



## அப்போஸ்தலர் 2 : 4

**“அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்.”**

பரிசுத்த ஆவியின் வெளிப்பாடான இந்த அந்நிய பாஷையில் பேசுவது பின்நாளில் அப்போஸ்தலர்கள்....... தங்களுடைய மற்ற சீஷர்களின் மீது “......**கைகளை வைத்தபோது**.....”



**(அப். 19:6)**

கைமாறியது.


ஆனால், ஆதிகால சபையில், ஆராதனைக் கூடுகையின்போது **“அந்நிய பாஷை”** பேசும் விஷயத்தில் சில நிபந்தனைகள் கடைப்பிடிக்கப்பட்டு வந்ததை பின்வரும் வசனத்தில் நாம் வாசிக்கிறோம்

## 1 கொரிந்தியர் 14 : 27,28

**“யாராவது அந்நிய பாஷையிலே பேசுகிறதுண்டானால், அது இரண்டுபேர்மட்டில், அல்லது மிஞ்சினால் மூன்றுபேர்மட்டில் அடங்கவும், அவர்கள் ஒவ்வொருவராய்ப் பேசவும், ஒருவன் அர்த்தத்தைச் சொல்லவும் வேண்டும். அர்த்தஞ் சொல்லுகிறவனில்லாவிட்டால், சபையிலே பேசாமல், தனக்கும் தேவனுக்கும் தெரியப் பேசக்கடவன்.”**

**பார்த்தீர்களா ?**

ஆதிகால சபையில், ஆராதனைக்காக கூடிவரும்பொழுது அந்நிய பாஷை பேசுகிற இந்த வரத்தை வெளிப்படுத்துவதற்கு சில நிபந்தனைகளும், ஒழுங்கு முறைகளும் கடைபிடிக்கவேண்டியது அவசியமாயிருந்தது. அதை அவர்கள்,



**"....இரண்டுபேர்மட்டில், அல்லது மிஞ்சினால் மூன்றுபேர்மட்டில்..." பேசவேண்டும்,**

ஆம், ஒரு கூடுகையில் அந்நிய பாஷை பேசுகிறவர்களின் எண்ணிக்கை அதிகபட்சம்.... மூன்று பேராக இருக்கவேண்டும். மேலும், நாம் வாசிப்பது.......

**"...அவர்கள் ஒவ்வொருவராய்ப் பேசவும்..."**

இது அந்நிய பாஷை பேசுவதென்பது தனித்தனியாக .....அதாவது "ஒருவர் பின் ஒருவராக" பேச வேண்டுவதைக் குறிக்கிறது.

அவர்கள் மூவரும் ஒரே நேரத்தில் சேர்ந்து பேசுவதற்கு ஒருபோதும் அனுமதியில்லை. மேலும், நாம் வாசிப்பது,

**"...ஒருவன் அர்த்தத்தைச் சொல்லவும் வேண்டும்..."**


ஆம், பேசப்பட்ட "அந்நிய பாஷையை" வியாக்கியானம் (அ)

விவரிப்பதற்கு ஒருவர் இருக்கவேண்டியது அவசியம். ஒருவேளை, பேசுகிறவர்கள்

**"...அர்த்தஞ் சொல்லுகிறவனில்லாவிட்டால், சபையிலே பேசாமல்..."**

-இருக்கவேண்டும் என்ற அளவிற்கு அப்போஸ்தலர்கள் இவ்விஷயத்தில் கண்டிப்புடன் எழுதியிருந்தனர்.

ஆம், "அந்நிய பாஷையில்" பேசுகிறவர்களுக்கு அர்த்தஞ் சொல்லுகிறவன் இல்லாத பட்சத்தில் அவர்கள் சபையில் அமைதியாக இருக்கவேண்டும் என்றும், அவர்கள் பேசுவதற்கு அனுமதியளிக்கக் கூடாது என்றும் அறிவுறுத்தப்பட்டிருந்தார்கள்.



**இந்த வசனப் பகுதிகள்......... சிந்தனையை தூண்டக்கூடியதாக இருக்கிறதல்லவா ?**

**மேலும், சபைகளில் இன்று "அந்நிய பாஷை" பேசப்படும்பொழுது இந்த நிபந்தனைகள் கடைபிடிக்கப்படுவதை பார்க்கமுடிகிறதா ?**



இப்பொழுது, ஆதிகால சபையில் "அந்நிய பாஷை" பேசப்பட்டதன் காரணத்தை காண்போம். பின்வரும் வசனப்பகுதியை வாசிப்போம்

**1 கொரிந்தியர் 14 : 6, 26**

**"மேலும், சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்து உங்களுக்கு இரகசியங்களை வெளிப்படுத்துவதற்காவது, அறிவுண்டாக்குவதற்காவது, தீர்க்கதரிசனத்தை அறிவிக்கிறதற்காவது, போதகத்தைப் போதிக்கிறதற்காவது ஏதுவானதைச் சொல்லாமல், அந்நியபாஷைகளில் பேசினால் என்னாலே உங்களுக்குப் பிரயோஜனம் என்ன ?"**

**"நீங்கள் கூடிவந்திருக்கிறபோது, உங்களில் ஒருவன் சங்கீதம்**

**பாடுகிறான், ஒருவன் போதகம்பண்ணுகிறான், ஒருவன் அந்நியபாஷையைப் பேசுகிறான், ஒருவன் இரகசியத்தை வெளிப்படுத்துகிறான், ஒருவன் வியாக்கியானம்பண்ணுகிறான். சகோதரரே, இது என்ன ? சகலமும் பக்திவிருத்திக்கேதுவாகச் செய்யப்படக்கடவது.”**

ஆம், **“அந்நிய பாஷை பேசுதல்”** என்பது, புதிய ஏற்பாடு இன்னும் எழுதப்படாத காலத்தில், சபையினுடைய பரிசுத்தமாக்கப்படுதல் அல்லது ஆவிக்குரிய வளர்ச்சிக்கான, தேவனுடைய வார்த்தைகள் மற்றும் போதனைகள் வெளிப்படுத்தப்பட்ட

**தெய்வீக வெளிப்பாட்டு முறையாகும்.**




இங்கு, “அந்நிய பாஷை பேசுவது” பற்றின விஷயத்தில்........தவறாக புரிந்துகொள்வதைக் குறித்து **அப்போஸ்தலனாகிய பவுல்** எழுதியதை காண்போம். ஆம், இப்பொழுது பின்வரும் வசனத்தை வாசிப்போம்

**1 கொரிந்தியர் 14 : 2**

**“ஏனெனில், அந்நியபாஷையில் பேசுகிறவன், ஆவியிலே இரகசியங்களைப்பேசினாலும், அவன் பேசுகிறதை ஒருவனும் - அறியாதிருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான்.”**





**ஆம், இன்று இவ்வசனத்தை “அந்நிய பாஷைகளில்” பேசுகிறவர்கள் தேவன் மாத்திரம் அறிந்திருக்கிற, அதேசமயம் சாத்தானால் புரிந்து கொள்ளமுடியாத பாஷையை தாங்கள் பேசுவதாக நிரூபிப்பதற்கு பயன்படுத்துகிறார்கள்.**

இதன்மூலம், “அந்நிய பாஷைகளில்” பேசுவதற்காக வைராக்கியம் கொண்டு அநேகர்,




**....பேருந்துகளில் பயணிக்கையிலும்**

**...சாலையோரங்களில் நடக்கையிலும்**

**...தங்களுடைய வீட்டில் ஓய்ந்திருக்கையிலும்** பேசுவதை காண்கிறோம்.

அப்படிப்பட்டவர்கள், தங்களுடைய உதடுகளில் எப்பொழுதும் முணுமுணுத்தவாறு இருப்பதை நீங்கள் கவனித்திருக்கலாம்.



ஆம், அவர்கள் தேவனிடத்தில் “அந்நிய பாஷைகளில்” பேசிக்கொண்டிருப்பதாக சொல்கிறார்கள்.

## இவையனைத்தும் உண்மையா ?

### வேத வசனங்கள் இதை நமக்கு போதிக்கிறதா ?

இதை புரிந்துகொள்ள நாம் முயற்சிப்போம். வேத வசனங்கள் போதிப்பதாக நாம் முதலில் கவனிப்பது என்னவெனில்,

**அந்நிய பாஷைகளில் பேசுகிற ஒருவர் அறியப்படாத பாஷையை** பேசுவதாகவே போதிக்கிறது.

மேலும், அது போதிப்பது என்னவெனில் –

**“...ஆவியினாலே இரகசியங்களைப் பேசி....ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே...”**

### இது எதைக் குறிக்கிறது ?

இது தமிழ் அல்லது ஆங்கிலம் மாத்திரம் அறிந்திருக்கிற சபையார் மத்தியில்.......ஒருவர் சீன மொழியிலோ அல்லது ஜப்பானிய மொழியிலோ பேசும் பொழுது ஏற்படுகிற அனுபவத்தை குறிக்கிறது.

**அவர்கள் ஒரு சிறு வார்த்தையைக் கூட புரிந்துகொள்வது கடினமாகும்.**

மேலும், நீங்கள் சபையாரை பார்த்து ............ அவர் என்ன பேசினார் ......... என்று கேட்டால், அதற்கு அவர்கள் அனைவரின் பதிலும்

**“தேவனுக்குத்தான் தெரியும்”** என்று சொல்வார்கள்.

அது உண்மைதான். ஏனெனில், தேவன் ஒருவரே அனைத்து பாஷைகளையும் அறிந்திருக்கிறார்.

மேலும், அவரே அனைத்து பாஷைகளையும் நமக்கு தந்தவர் என்பதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம்.

**ஆதியாகமம் 11 : 6, 7**

**"அப்பொழுது கர்த்தர் – ஜனங்கள் ஒரே கூட்டமாய் இருக்கிறார்கள், அவர்கள் அனைவருக்கும் ஒரே பாஷையும் இருக்கிறது. அவர்கள் இதைச் செய்யத்தொடங்கினார்கள், இப்பொழுதும் தாங்கள்செய்ய நினைத்தது ஒன்றும் தடைபடமாட்டாது என்று இருக்கிறார்கள்."**



**"நாம் இறங்கிப்போய், ஒருவர் பேசுகிறதை மற்றொருவர் அறியாதபடிக்கு, அங்கே அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்குவோம் என்றார்."**

ஆம், தேவனுக்கென்று தனிப்பட்ட பாஷை ஏதுமில்லை, மாறாக அவரே .....அனைத்து பாஷைகளுக்கும் மூல காரணராக இருக்கிறார். எனவே, "அறியப்படாத பாஷையை" குறித்த விஷயத்தில்

**"...அவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான்..."**

என்று சொல்லப்படுவது உண்மையும், சரியானதுமாக இருக்கிறது.

**ஏனெனில், தேவன் ஒருவர் மாத்திரமே அதை புரிந்துகொள்ளக்கூடியவராக இருக்கிறார்.**

**இதையே அப்போஸ்தலனாகிய பவுல் இங்கு சொல்ல முயற்சிக்கிறார்.**

ஆம், கேட்கிறவர்கள் புரிந்துகொள்ளமுடியாத "அந்நிய பாஷைகளில்" அல்லது மொழிகளில் பேசுவதென்பது, அந்த வார்த்தைகளை புரிந்துகொள்ளாத "மனிதர்களுக்கு" அவை "இரகசியமாகவே" தோன்றும். எனவே அவைகளை தேவன் மாத்திரமே புரிந்துகொள்ளக்கூடியவராக இருப்பார்.

மேலும், **"அந்நிய பாஷைகளை பேசுவது" அவிசுவாசிகளுக்கான அடையாளமாக** இருப்பதை பின்வரும் வசனங்களில் வாசிக்கிறோம்



**1 கொரிந்தியர் 14 : 22**

**"அப்படியிருக்க, அந்நியபாஷைகள் விசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல், அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது. தீர்க்கதரிசனமோ அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல், விசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது."**

ஆம், "அந்நிய பாஷைகளில் பேசுவது" அவிசுவாசிகளுக்கான ஒரு அடையாளமாகும்.

ஆனால், இன்று "அந்நிய பாஷைகளில் பேசுவது" விசுவாசிகளுக்கான அடையாளமாக இருப்பது ஆச்சரியமாக இருக்கிறது அல்லவா ?

ஆனால், ஆதிகால சபையில் அது அப்படியிருக்கவில்லை என்பதை வாசிக்கிறோம்.

## அப்போஸ்தலர் 2 : 8, 12

**"அப்படியிருக்க, நம்மில் அவரவர்களுடைய ஜென்மபாஷைகளிலே இவர்கள் பேசக் கேட்கிறோமே, இதெப்படி ? எல்லாரும் பிரமித்துச் சந்தேகப்பட்டு, இதென்னமாய் முடியுமோ என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்."**

ஆம், அது அவிசுவாசிகளுக்கு ஆச்சரியமாக இருந்தது. மேலும், அது அவர்களுக்கு தேவனுடைய வல்லமையின் மிக பெரிய வெளிப்பாடாக இருந்தது.

இங்கு, அப்போஸ்தலனாகிய பவுல் அதிகபட்ச "பாஷைகளை" அல்லது மொழிகளில் பேசியிருப்பதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் –

## 1 கொரிந்தியர் 14 : 18

**"உங்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பாஷைகளைப் பேசுகிறேன், இதற்காக என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்."**



ஆம், புறஜாதிகளுக்கென்று விசேஷமாக தெரிந்துகொள்ளப்பட்ட அப்போஸ்தலனாகிய பவுல் எண்ணிக்கையில் அநேக விதமான "பாஷைகளை" பேசியிருப்பதை வாசிக்கிறோம்

**"விருத்தசேதனமுள்ளவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி**

**பேதுருவுக்குக் கையளிக்கப்பட்டதுபோல, விருத்தசேதனம் இல்லாதவர்களுக்குப் பிரசங்கிக்கும்படி அது எனக்கும் கையளிக்கப்பட்டதென்று அவர்கள் கண்டு....” - (கலாத்தியர் 2 : 8)**

அதுபோலவே, இந்தியாவில் தமிழ் நாடு மற்றும் கேரள மாநிலங்களில் மிக பெரிய ஊழியம் செய்த அப்போஸ்தலனாகிய தோமாவும், -



**.....தமிழ் மற்றும் மலையாள**

“பாஷைகளில்” பேசும் வரம் பெற்றவராக இருந்திருக்க வேண்டும்.

இருந்தபோதிலும், சபைக்கூடி வரும்பொழுது விசுவாசிகளுக்கு மத்தியில், இந்த “பாஷைகளில்” அல்லது மொழிகளில் பேசுவதை ஒருவரும் புரிந்துகொள்ளாத பட்சத்தில் இந்த வரத்தை பயன்படுத்துவதை அப்போஸ்தலனாகிய பவுல் நிராகரிப்பதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம்.

**1 கொரிந்தியர் 14 : 9, 23**

**“அதுபோல், நீங்களும் தெளிவான பேச்சை நாவினால் வசனியாவிட்டால் பேசப்பட்டது இன்னதென்று எப்படித் தெரியும் ? ஆகாயத்தில் பேசுகிறவர்களாயிருப்பீர்களே.”**

**“ஆகையால், சபையாரெல்லாரும் ஏகமாய்க் கூடிவந்து, எல்லாரும் அந்நியபாஷைகளிலே பேசிக்கொள்ளும்போது, கல்லாதவர்களாவது, அவிசுவாசிகளாவது உள்ளே பிரவேசித்தால், அவர்கள் உங்களைப் பைத்தியம் பிடித்தவர்களென்பார்களல்லவா ?**

**ஆம், இங்கு அப்போஸ்தலனாகிய பவுல் பேசுவதை கவனித்தீர்களா ?**

அவர் இன்று பரவலாக காணப்படுகிற சூழ்நிலையை ....அதாவது சபைகளில் அனைவரும் கூடிவந்திருக்கையில் எல்லோரும் ஒன்றாக சேர்ந்து “அந்நிய பாஷைகளில்” பேசுவதைக் குறித்து அவர் பேசுவதை காண்கிறோம்.



ஆம், இதையே அப்போஸ்தலனாகிய பவுல் செய்யக்கூடாது என்று கூறியிருந்தார். ஏனெனில், நம்முடைய தேவனைக் குறித்து வாசிக்கையில் –

**1 கொரிந்தியர் 14 : 33**

**“தேவன் கலகத்திற்குத் தேவனாயிராமல், சமாதானத்திற்குத் தேவனாயிருக்கிறார், பரிசுத்தவான்களுடைய சபைகளெல்லாவற்றிலேயும் அப்படியே இருக்கிறது.”**

ஆம், இதை நாம் எப்பொழுதும் நம்முடைய இருதயத்தில்

வைத்திருப்பது அவசியம், ஏனெனில் பழைய ஏற்பாட்டில் பிரசங்கி கூறியிருப்பதை வாசிக்கையில் –

**பிரசங்கி 5 : 1, 2**

**"நீ தேவாலயத்துக்குப் போகும்போது உன் நடையைக் காத்துக்கொள்; மூடர் பலியிடுவதுபோலப் பலியிடுவதைப்பார்க்கிலும் செவிகொடுக்கச் சேர்வதே நலம். தாங்கள் செய்கிறது தீமையென்று அறியாதிருக்கிறார்கள்."**



**"தேவசமுகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம்பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலும் இரு; தேவன் வானத்திலிருக்கிறார்; நீ பூமியிலிருக்கிறாய், ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக."**

ஆம், தேவனுடைய சமுகத்தில் ஒருவர் மிக கவனமாக இருக்க வேண்டும். எல்லோரும் சேர்ந்து ஒரே சமயத்தில் பாஷைகளை பேசுவது ஒருவருக்கும் பிரயோஜனமாயிராமல்..... இரைச்சலும், குழப்பமுமாகவும் இருக்கும்.

இவைகளை தவிர, இந்த "அந்நிய பாஷைகளில்" பேசுகிற "வரமானது" சந்திக்கப்போவதாக எழுதியிருப்பதைக் குறித்து நாம் வாசிக்கையில் –

## 1 கொரிந்தியர் 13 : 8

**"...அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம்..."**

ஆம், இங்கு "ஓய்ந்துபோம்" என்கிற வார்த்தை முடிவுக்கு வரும் என்பதை குறிக்கிறது. இவ்விதமாக, இந்த வல்லமை அல்லது பரிசுத்த ஆவியின் "வெளிப்பாடு" பின்நாளில் காணப்படாமல் போகும் அல்லது முடிவுக்கு வரும் என்பதை வசனங்கள் தெரிவிக்கின்றன.

## அது ஏன் ?

அது ஏனென்றால், பரிசுத்த ஆவியின் இந்த "வரம்" அப்போஸ்தலனாகிய ஒருவர் மூலமாகவே ஒருவரிடமிருந்து மற்றவருக்கு அருளக்கூடியதாக இருந்ததை நாம் வாசிக்கிறோம்.

## அப்போஸ்தலர் 10 : 40, 44

**"மூன்றாம் நாளிலே தேவன் அவரை எழுப்பிப் பிரத்தியட்சமாய்க் காணும்படி செய்தார். இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக்கொண்டிருக்கையில் வசனத்தைக்கேட்டவர்கள் யாவர்மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார்."**

மேலும் இதைக் குறித்து மற்றொரு வசனத்தில் வாசிக்கையில்,

## அப்போஸ்தலர் 8 : 14 - 17

**"சமாரியர் தேவவசனத்தை ஏற்றுக்கொண்டதை எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டு, பேதுருவையும் யோவானையும் அவர்களிடத்திற்கு அனுப்பினார்கள். இவர்கள் வந்தபொழுது அவர்களில் ஒருவனும் பரிசுத்த ஆவியைப்**



**பெறாமல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானத்தைமாத்திரம் பெற்றிருந்தவர்களாகக் கண்டு, அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும்படி அவர்களுக்காக ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள், அப்பொழுது அவர்கள் பரிசுத்தஆவியைப் பெற்றார்கள்."**

மேலும் இதைக் குறித்து மற்றொரு வசனத்தில் வாசிக்கையில்,

**அப்போஸ்தலர் 19 : 6**

**"அல்லாமலும் பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தபோது, பரிசுத்தஆவி அவர்கள்மேல் வந்தார், அப்பொழுது அவர்கள் அந்நியபாஷைகளைப் பேசித்தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்."**


ஆம், இங்கு அது தெளிவாக கொடுக்கப்பட்டுள்ளதை காண்கிறோம்.

எனவே, **அப்போஸ்தலர் அனைவருடைய மரணத்திற்கு பின்பு பரிசுத்த ஆவியின் இந்த "வரம்"**....

➡ **"முடிவுக்கு வரும்".**

**அந்நிய பாஷைகளில் பேசுகிறதான இந்த "வரம்" ஆதிகால சபைக்கு கொடுக்கப்பட்டதின் காரணம் என்ன ?**

இது இரண்டு நோக்கங்களை நிறைவேற்ற ஆதிகால சபை ஸ்தாபிக்கப்படுவதற்கு கொடுக்கப்பட்டது. அவை...




**1. கர்த்தருடைய மிக பெரிய கட்டளையை நிறைவேற்றுவதற்கு....**

**மத்தேயு 28 : 19**

**"ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து..."**

ஆம், அனைத்து தேசங்களுக்கும் சுவிசேஷத்தை அவரவர் பாஷையில் பிரசங்கித்தது அவசியமாயிருந்தது. ஆனால், அப்போஸ்தலர்களோ எபிரெய மற்றும் அரமி பாஷைகளை மாத்திரமே அறிந்திருந்தனர்.

**2.** மேலும், **"அந்நிய பாஷை பேசுவது" தெய்வீக வெளிப்பாடுகளை போதித்து புதிய ஏற்பாடு எழுதப்படாத காலக்கட்டத்தில் ஆதிகால சபையை வழிநடத்தவும்** தேவனால் பயன்படுத்தப்பட்டதை வாசிக்கிறோம்,



**1 கொரிந்தியர் 14 : 6**

**"மேலும், சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்து உங்களுக்கு இரகசியங்களை வெளிப்படுத்துவதற்காவது, அறிவுண்டாக்குவதற்காவது, தீர்க்கதரிசனத்தை அறிவிக்கிறதற்காவது, போதகத்தைப் போதிக்கிறதற்காவது ஏதுவானதைச் சொல்லாமல், அந்நியபாஷைகளில் பேசினால் என்னாலே உங்களுக்குப் பிரயோஜனம் என்ன ?"**

**ஆம், இங்கு தெளிவாக கொடுக்கப்பட்டிருப்பதை காண்கிறோம்.**

**இப்படியிருக்க, இன்றைய நாட்களில் நாம் பார்க்கிற "அந்நிய பாஷைகளை பேசுதல்" குறித்து நாம் என்ன சொல்வோம் ?**

இதற்கான பதிலை பெற்றுக்கொள்ள பின்வரும் காரியங்களை நாம் கவனிக்கவேண்டியது அவசியம்.

**அப்போஸ்தலர்கள் தங்களுடைய கைகளை வைக்குதலின் மூலம் அருளக்கூடிய "வரம்" ..... 1700 வருடங்களுக்கு பின்பாக மீண்டும் திடீர் என்று தோன்றியது எப்படி சாத்தியமாகும் ?**

**இங்கு, "அந்நிய பாஷை" என்பது வியாக்கியானம் செய்பவர் இல்லாமல். 1கொரிந்தியர் 14 : 28 வசனத்திற்கு கீழ்ப்படியாதபடி பேசப்படுவது <u>என்ன</u> ?**

**1 கொரிந்தியர் 14 : 27 லில் சொல்லப்பட்டது போல "மிஞ்சினால் மூன்றுபேர்மட்டில்" பேசுவதற்கு பதிலாக "ஒரே நேரத்தில்" எல்லோரும் சேர்ந்து அந்நிய பாஷை பேசுவது <u>என்ன</u> ?**

**மேலும், இன்றைய அந்நிய பாஷைகள் பெந்தெகொஸ்தே நாளில் நடந்தது போல அசுவாசிகளுக்கு ஒரு அடையாளமாக இல்லாமல் இருப்பது ஏன்? (அப்போஸ்தலர் 2 : 8)**



இன்று அந்நிய பாஷை பேசுபவர்களின் போதனைகள் வேதத்தின் அடிப்படையில் அமைந்த போதனைகளா...? என்றும் அவை **"மகா பரிசுத்தமான விசுவாசமா"** (யூதா 24)...? என்றும் சோதித்து பாருங்கள். **உதாரணம் - ஆத்துமா, நரகம், திருத்துவம்** போன்ற போதனைகள்.

**இதைப்பற்றின "சத்தியத்தை" நீங்கள் உண்மையிலேயே அறிவீர்கள். அது ..."உங்களை விடுதலையாக்கும்" (யோவான் 8 : 32).**

இப்பொழுது நாம் பரிசுத்த ஆவியின் மற்றொரு "வரத்தை" காணலாம்.

# அற்புதங்கள் / சுகமளிக்கும் வரங்கள்


இது நோய்களை குணமாக்குவதற்கு தேவனுடைய "வல்லமையை" பிரயோகித்ததாகும். இதன்மூலம்,

**....சரீரம் மற்றும் மனநோய்களிலிருந்தும்**

**....அசுத்த ஆவிகளிடமிருந்தும்**

**....மரணத்திலிருந்து விடுவிக்கப்படுவதும்** கூட நிறைவேற்றப்படுகிறது.

பரிசுத்த ஆவியின் இந்த "வரம்" ஆதிகால சபையில் அப்போஸ்தலர்கள் மற்றும் சீஷர்களால் பிரயோகிக்கப்பட்டது, இங்கு சில உதாரணங்களை காண்போம்.



## அப்போஸ்தலர் 5 : 15,16

"பிணியாளிகளைப் படுக்கைகளின் மேலும் கட்டில்களின்மேலும் கிடத்தி, பேதுரு நடந்துபோகையில் அவனுடைய நிழலாகிலும் அவர்களில் சிலர்மேல் படும்படிக்கு, அவர்களை வெளியே வீதிகளில் கொண்டுவந்து வைத்தார்கள். சுற்றுப்பட்டணங்களிலுமிரு--ந்து திரளான ஜனங்கள் பிணியாளிகளையும் அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களையும் எருசலேமுக்குக் கொண்டுவந்தார்கள், அவர்களெல்லாரும் குணமாக்கப்பட்டார்கள்."

## அப்போஸ்தலர் 6 : 8

"ஸ்தேவான் விசுவாசத்தினாலும், வல்லமையினாலும் நிறைந்தவனாய் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான்."

## அப்போஸ்தலர் 9 : 40

பேதுரு எல்லாரையும் வெளியே போகச்செய்து, முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, பிரேதத்தின் புறமாய்த் திரும்பி – தபீத்தாளே எழுந்திரு என்றான். அப்பொழுது அவள் தன் கண்களைத் திறந்து, பேதுருவைப் பார்த்து உட்கார்ந்தாள்."

## அப்போஸ்தலர் 19 : 11,12

"பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார். அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் கொண்டு வந்து, வியாதிக்காரர்மேல் போட வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப்போயின, பொல்லாத ஆவிகளும் அவர்களை விட்டுப் புறப்பட்டன"

இந்த வசனங்கள் அனைத்தும் **பரிசுத்த ஆவியின் "வரமாகிய" ....குணமாக்குதலும் அற்புதம் அடையாளங்களை** செய்வதின் ஆதாரமாக இருக்கிறது. இவையனைத்தும் ஆதிகால சபையில் அப்போஸ்தலர்கள் மற்றும் சீஷர்களால் நடப்பிக்கப்பட்டது.


ஆனால், அப்போஸ்தலர்கள் மற்றும் சீஷர்கள் நடப்பித்த இந்த "குணமாக்குதல்" மற்றும் "அற்புதங்கள்" காரியத்தைக் குறித்து நாம் கவனிக்கவேண்டியது ஒன்றுள்ளது.

**ஆம், இவையனைத்தும் .......அவிசுவாசிகளுக்கும் பொது ஜனங்களுக்குமாக இருந்து அவர்களிடமே எப்பொழுதும் நடப்பிக்கப்பட்டது.**

**மாறாக, ஒரு போதும் கிறிஸ்தவ விசுவாசிகள் மீதல்ல.**

ஆம், ஆதிகால சபையில் அப்போஸ்தலர்கள் மற்றும் சீஷர்களால் இந்த "வல்லமையானது" ஒருபோதும் தங்களுக்காக நடப்பித்து கொள்ளவில்லை.





**1 தீமோத்தேயு 5 : 23**

**" நீ இனிமேல் தண்ணீர் மாத்திரம் குடியாமல், உன் வயிற்றிற்காகவும், உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும், கொஞ்சம் திராட்சரசமும் கூட்டிக்கொள்."**

ஆம், இது தீமோத்தேயுவுக்கு இருந்த வயிற்று பிரச்சனைக்கு **"...கொஞ்சம் திராட்சரசத்தை"** இயற்கை

வையித்தியமாக பயன்படுத்த அப்போஸ்தலனாகிய பவுல் எழுதியதாகும்.

இங்கு அவர் …… தீமோத்தேயுவின் மீது கைகளை வைத்து அற்புதமான முறையில் அவரை குணப்படுத்த எந்த பிரயாசமும் அப்போஸ்தலனாகிய பவுல் எடுக்கவில்லை என்பதை கவனிக்கவும்.

அதே சமயம் அவருக்கு **“உறுமால்களை”** கூட குணமாக்கும் நோக்கோடு மற்றவர்களுக்கு அனுப்பியது போல அனுப்பவில்லை என்பதை கவனிக்கவும்,

**அப்போஸ்தலர் 19 : 12**

**“அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் கொண்டு வந்து, வியாதிக்காரர்மேல் போட வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப்போயின, பொல்லாத ஆவிகளும் அவர்களை விட்டுப் பறப்பட்டன.”**

இதன்மூலம் ஆதிகால சபையின் கிறிஸ்தவர்கள் அற்புதங்களை நடப்பிக்கிற இந்த “வல்லமையை”

…அவிசுவாசிகளுக்கான அடையாளமாக மாத்திரமே பயன்படுத்த வேண்டும் என்று அறிந்திருந்ததையும்

…மாறாக, தங்கள் மீது தங்களுக்காக அல்ல என்பதையும் உணர்ந்திருந்ததை நாம் காண்கிறோம்.

**ஆனால், இன்று குணமாக்கும் அற்புத அடையாளங்கள் வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுவதை காண்கிறோம்.**

மேலும், இவ்வசனத்தை(1 தீமோ. 5 : 23) இன்று

**மது அருந்துவதற்கான அங்கீகாரமாக**

பயன்படுத்தப்பட்டு அநேக கிறிஸ்தவர்கள் தினந்தோறும் கொஞ்சம் மது அருந்துவதை காண்கிறோம். இவர்கள் தீமோத்தேயுவுக்கு அப்போஸ்தலனாகிய பவுல் எழுதின நோக்கத்தை புரிந்துகொள்ளாமல் இருக்கிறார்கள்.

ஏனெனில், இங்கு “திராட்சரசத்தை” முற்றிலும் மருத்துவ ரீதியாகவே தீமோத்தேயுவின் வயிற்று உபாதைகளுக்கு பயன்படுத்த அப்போஸ்தலன் குறிப்பிட்டிருந்ததை தெளிவாக காண்கிறோம்.

மேலும், மரித்தவர்களை அப்போஸ்தலர் பேதுரு மற்றும் அப்போஸ்தலர் பவுல் எழுப்பிய சம்பவத்தைக் குறித்து நாம் வாசிக்கையில்,

## அப்போஸ்தலர் 9 : 36 - 42

**“யோப்பா பட்டணத்தில் கிரேக்கப் பாஷையிலே தொற்காள் என்று அர்த்தங்கொள்ளும் தபீத்தாள் என்னும் பேருடைய ஒரு சீஷி இருந்தாள். அவள் நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்துகொண்டுவந்தாள். அந்நாட்களில் அவள் வியாதிப்பட்டு மரணமடைந்தாள். அவளைக் குளிப்பாட்டி மேல்வீட்டிலே கிடத்திவைத்தார்கள். யோப்பா பட்டணம் லித்தா ஊருக்குச் சமீபமானபடியினாலே, பேதுர அவ்விடத்தில் இருக்கிறானென்று சீஷர்கள் கேள்விப்பட்டு, தாமதமில்லாமல் தங்களிடத்தில் வரவேண்டுமென்று சொல்லும்படி இரண்டு மனுஷரை அவனிடத்திற்கு அனுப்பினார்கள். பேதுரு எழுந்து, அவர்களுடனே கூடப்போனான். அவன் போய்ச் சேர்ந்தபொழுது, அவர்கள் அவனை மேல்வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனார்கள். அப்பொழுதுவிதலைகளெல்லாரும் அழுது தொற்காள் தங்களுடனேகூட இருக்கையில் செய்திருந்த அங்கிகளையும் வஸ்திரங்களையும் காண்பித்து, அவனைச் சூழ்ந்துநின்றார்கள். பேதுரு எல்லாரையும் வெளியே போகச்செய்து, முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, பிரேத்தின் புறமாய்த் திரும்பி - தபீத்தாளே, எழுந்திரு என்றான். அப்பொழுது அவள் தன் கண்களைத் திறந்து, பேதுருவைப் பார்த்து உட்கார்ந்தாள். அவன் அவளுக்குக் கைகொடுத்து, அவளை எழுந்திருக்கப்பண்ணி, பரிசுத்தவான்களையும் விதவைகளையும் அழைத்து, அவளை உயிருள்ளவளாக அவர்களுக்கு முன் நிறுத்தினான். இது யோப்பா பட்டணம் எங்கும் தெரியவந்தது. அப்பொழுது அநேகர் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள்.**



இது அப்போஸ்தலனாகிய பேதுருவால் நடப்பிக்கப்பட்டது. பின்பு நாம் வாசிக்கையில்,


**அப்போஸ்தலர் 20 : 9 - 12**

**“அப்பொழுது ஐத்திகு என்னும் பேர்கொண்ட ஒரு வாலிபன் ஜன்னலில் உட்கார்ந்திருந்து, பவுல் நெடுநேரம் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருக்கையில், மிகுந்த தூக்கமடைந்து, நித்திரைமயக்கத்தினால் சாய்ந்து, மூன்றாம் மெத்தையிலிருந்து கீழே விழுந்து, மரித்தவனாய் எடுக்கப்பட்டான். உடனே பவுல் இறங்கிப்போய், அவன்மேல் விழுந்து, அவனை அணைத்துக்கொண்டு - கலங்காதிருங்கள், இவன் உயிர் இவனுக்குள் இருக்கிறது என்றான். பின்பு ஏறிப்போய், அப்பம் பிட்டுப்புசித்து, விடியற்காலமளவும் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்து, பின்பு புறப்பட்டான். அந்த வாலிபனை அவர்கள் உயிருள்ளவனாகக் கூட்டிக்கொண்டுவந்து, மிகுந்த ஆறுதலடைந்தார்கள்.”**



இது அப்போஸ்தலனாகிய பவுலால் நடப்பிக்கப்பட்டது.

இவையனைத்தும் கர்த்தருடைய மகிமையையும், வல்லமையையும் பிரஸ்த்தாபப்படுத்தவும்....



.....தங்களுடைய சிலுவையை எடுத்து போதகரின் அடிச்சுவடுகளை பின்பற்ற அழைக்கப்பட்டவர்களுக்கு சுவிசேஷ நற்செய்தியை எடுத்துசொல்லவும் நடப்பிக்கப்பட்டது.

அப்போது, புதிய ஏற்பாடு மற்றும் நான்கு சுவிசேஷங்களும் ஏழுதப்படாமல் இருந்ததை நாம் கவனிக்கவேண்டும்.

**ஆனால், இந்த அற்புதங்கள் ஒருவன் இயேசுவை விசுவாசித்து அவருக்கு சீஷராக மாறுவதற்கு அடிப்படையாக கருதப்படவில்லை.**

மேலும், கர்த்தர் அப்படிப்பட்டவர்கள் தம்முடைய சீஷராவதற்கு விரும்பவில்லை என்பதாக வாசிக்கிறோம்.

**யோவான் 2 : 23 - 25**

**"பஸ்காபண்டிகையிலே அவர் எருசலேமிலிருக்கையில், அவர் செய்த அற்புதங்களை அநேகர் கண்டு, அவருடைய நாமத்தில் விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்தும், இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியால், அவர்களை நம்பி இணங்கவில்லை. மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால், மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சி கொடுக்கவேண்டியதாயிருக்கவில்லை."**

ஆம், "அற்புதங்கள் அடிப்படையாக கொண்ட" இந்த விசுவாசம் இயேசுவின் நாட்களிலிருந்து இன்று வரை அதிக அளவில் காணப்படுகிறது.

ஆனால், கிறிஸ்தவ ஜீவியத்திற்கு இது ஆதாரமாக இருக்கக்கூடாது. ஏனென்றால்,

**2 கொரிந்தியர் 5 : 6**

**"நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்."**

ஆம், இங்கு மிக தெளிவாக கொடுக்கப்பட்டுள்ளதை காண்கிறோம். இவ்விதமாக, அற்புத அடையாளங்களை எதிர்பார்க்கிற கிறிஸ்தவர்களைக் குறித்து கர்த்தர் பேசின தீர்க்கதரிசன வசனங்களை நாம் வாசிக்கையில்,

**மத்தேயு 7 : 22, 23**

**"அந்நாளில் அநேகர் என்னை நோக்கி - கர்த்தாவே, கர்த்தாவே உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா ? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா ? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா?**

**என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை, அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்."**

ஆம், "அந்நாளில்"... அல்லது நியாயத்தீர்ப்பின் நாளில்.... அநேகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்ததை குறித்து பேசுவதை கர்த்தர் விவரிக்கிறார். ஆனால் அதற்கு மறுமொழியாக கர்த்தர் -

**"நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை, அக்கிரமச் செய்கைக்காரரே"**

என்று சொல்வதை காண்கிறோம்.

இங்கு, **"கர்த்தாவே, கர்த்தாவே"** என்ற வார்த்தை **இரண்டு முறை** உச்சரிக்கப்படுவது பெயர் கிறிஸ்தவ மண்டலத்தின் இரண்டு பிரிவுகளாகிய,

**ரோமன் கத்தோலிக்கம்** மற்றும்.........

**புரோட்டஸ்டன்ட்** சபைகளைக் குறிக்கிறது.

**இவர்கள் இருவரும் இயேசுவின் நாமத்தில் அற்புத அடையாளங்களை நடப்பித்ததாக கூறுவார்கள்.**

ஆனால், அவர்களை தான் அறியவில்லை என்றும், அவர்கள் செய்த அற்புத அடையாளங்களை **"....அக்கிரமச் செய்கை"** என்றும் கர்த்தர் கூறுவார்.

ஆம், இந்த அற்புத அடையாளங்கள் தம்முடையதாக இயேசு அங்கீகரியாமலும், அப்படிப்பட்ட கிறிஸ்தவர்களை தம்முடைய ஊழியக்காரர் என்றும் அங்கீகரிக்கமாட்டார்.

**இது ஏன் ?**

**இந்த அற்புத அடையாளங்கள் "இயேசுவின் நாமத்தில்" ....இயேசுவின் வல்லமையினால் நடப்பிக்கப்படவில்லையா ?**

இந்த கேள்விக்கான விடை இயேசு கிறிஸ்துவின் நாட்களில் நடப்பிக்கப்பட்ட அற்புதங்களின் பின்னணியில் இருப்பதையும்

......அதேசமயம், இன்றைய பின்னணியிலும் இருப்பதாக வசனங்கள் வெளிப்படுத்துகிறது. முதலில்பின்வரும் வசனத்தை வாசிப்போம்

**மாற்கு 9 : 38 - 40**

**“அப்பொழுது யோவான் அவரை நோக்கி - போதகரே, நம்மைப் பின்பற்றாதவன் ஒருவன் உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துகிறதைக் கண்டோம். அவன் நம்மைப் பின்பற்றாதவனானதால், அவனைத் தடுத்தோம் என்றான். அதற்கு இயேசு: அவனைத் தடுக்க வேண்டாம். என் நாமத்தினாலே அற்புதஞ்செய்கிறவன் எளிதாய் என்னைக்குறித்துத் தீங்கு சொல்லமாட்டான். நமக்கு விரோதமாயிராதவன் நமது பட்சத்திலிருக்கிறான்.”**



ஆம், இது இயேசு கிறிஸ்துவின் சீஷன் அல்லாத ஒருவனும், அவரை அறியாதவனுமான ஒருவர் இயேசுவின் நாமத்தில் அற்புதங்கள் செய்ததாக பதிவுசெய்யப்பட்டுள்ள வசனப் பகுதியாகும். அவனை அப்போஸ்தலர்கள் தடுத்தபோதும் இயேசு பின்வரும் வார்த்தைகளின்மூலம் அனுமதித்ததை காண்கிறோம்.

**“...அவனைத் தடுக்க வேண்டாம். என் நாமத்தினாலே அற்புதஞ்செய்கிறவன் எளிதாய் என்னைக்குறித்துத் தீங்கு சொல்லமாட்டான்...”**

**இன்று அநேகர் இவ்வசனத்தை இன்றைய அற்புத அடையாளங்களை நியாயப்படுத்த ஆதாரமாக எடுக்கின்றனர்.**

**இயேசுவினுடைய இந்த வார்த்தைகளை இன்று நாம் பிரயோகிக்கலாமா ?**

இதற்கு இயேசு தாமே பதில் அளிப்பதை காண்கிறோம்.

**மத்தேயு 24 : 24, 25**

**"ஏனெனில், கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள். இதோ, முன்னதாக உங்களுக்கு அறிவித்திருக்கிறேன்."**

ஆம், இங்கு, "இயேசுவின் நாமத்தில்" அற்புதங்களை செய்து அநேகரை வஞ்சிக்கக்கூடிய அந்தி கிறிஸ்து அமைப்பு இந்த சுவிசேஷ யுகத்தில் உருவாகுவதைக் குறித்து இயேசு எச்சரிக்கிறார்.

ஆம், இங்கு, **"கள்ளக்கிறிஸ்துக்கள்"** என்பது **கள்ளசபை அமைப்புகளையும்.....**
**"கள்ள தீர்க்கதரிசிகள்"** என்பது அந்த அமைப்பில் உள்ள **கள்ளபோதகர்களையும்** குறிக்கிறது.

**இப்படியிருக்கையில்**

**"இயேசுவின் நாமத்தில்" நடப்பிக்கப்படுகிற இந்த அற்புதங்களை செய்வது யார் ?**

**என்று ஒருவர் கேட்கலாம்.**



இதற்கான பதிலை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம்

**2 கொரிந்தியர் 11 : 14**

**"அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே."**

ஆம், சாத்தானே அவைகளை நடப்பிக்கிறான்.

அவன் இந்த அற்புதங்களை **"ஒளியின் தூதனாக..."** வேஷம் தரித்து அல்லது **"வேறொரு இயேசுவாக" (2 கொரிந்தியர் 11 : 4)** மாறி நடப்பிக்கிறான்.

**கிறிஸ்தவர்கள் அனைவரும் வஞ்சிக்கப்பட்டு, தேவனுடைய வார்த்தையாகிய - வேதத்தில் (ஓசியா 4 : 6) உள்ள தங்களுடைய அறிவு குறைவினால் இதை "தேவ சித்தம்" என்று நினைக்கின்றனர்.**



இந்த உண்மை பின்வரும் வசனத்தின் மூலம் மேலும் உறுதிசெய்யப்படுகிறது

**2 தெசலோனிக்கேயர் 2 : 9 - "அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும்..."**

ஆம், இந்த அற்புதங்கள் அனைத்திலும் சாத்தான் தன்னுடைய

“எல்லா வல்லமையையும்” வெளிப்படுத்துவதாக……நாம் வாசிக்கிறோம்.

**ஆனாலும், இந்த “பொய்யான அற்புதங்களில்” உள்ள பொய் என்ன ?**

அது…….. இந்த அற்புதங்கள் இயேசுவின் நாமத்தை பயன்படுத்தி நடப்பிக்கப்படுகிறது…….

ஆனால் உண்மையில் அந்த அற்புதங்களில் வெளிப்படுகிற “வல்லமை”….

**இயேசுவின் வல்லமையே அல்ல என்பதேயாகும்.**

மேலும்… நாம் பின்வரும் வசனங்களை நாம் தொடர்ந்து வாசிப்போம்.

**2 தெசலோனிக்கேயர் 2:10,11**

**“கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற்போனபடியால் அப்படி நடக்கும். ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு…”**

ஆம், இந்த “பொய்யான அற்புதங்களில்” உள்ள கொடிய வஞ்சகத்தை தேவனே அனுமதிப்பதை நாம் தெளிவாக காண்கிறோம்.

எனவே, ஆதிகால சபையில் பெரிய அற்புதங்கள் நடப்பிக்கப்பட்டாலும், அவை சபையில் விசுவாசத்தை ஸ்தாபிப்பதற்காக குறுகிய காலத்திற்கு மட்டுமே ………அதாவது புதிய ஏற்பாடு எழுதப்பட்டு தீரும் வரை …….. அனுமதிக்கப்பட்டிருந்ததை நாம் காண்கிறோம்.

**பின்பு அற்புதங்கள் மற்றும் குணமாக்குகிற “இந்த அடையாளங்கள்” முடிவுக்கு வரும் என்று காண்கிறோம்.**

இப்பொழுது நாம் பரிசுத்த ஆவியின் மற்றொரு “வரம்” அல்லது “வெளிப்பாடு” குறித்து காண்போம்

## தீர்க்கதரிசனம் உரைத்தல்

ஆம், இன்று அநேக சபைகளில் குறிப்பிட்ட நேரங்களில்

**"தீர்க்கதரிசன ஞாயிறு"**

என்று அழைக்கப்படுகிற நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது.

அன்றைய தினம், ஆராதனை மற்றும் ஜெப வேளை முடிந்த பின்பு...

அல்லது ஜெப வேளையின் மத்தியிலோ ஒரு "தீர்க்கதரிசி" வந்து....கண்களை மூடி

**"தீர்க்கதரிசனம்"** உரைக்க துவங்குவார்.



அவர் தனிப்பட்ட நபர்களுடைய எதிர்கால வாழ்க்கையில் சம்பவிக்கும் நிகழ்ச்சிகளாகிய **திருமணம், பிள்ளை பெறுதல், மரணம், சில சமயங்களில் சுவிசேஷ ஊழியத்திற்கு அழைக்கப் படுதல்** -

- போன்றவைகளை குறித்து தீர்க்கதரிசனம் உரைப்பார்கள்.

இவர் **சிலருடைய வியாதிகளை அடையாளம் கண்டு** அவைகள் குணமாக்கப்படுவதைக் குறித்தும் பேசுவார்.

**இவைகள் அனைத்தையும் பற்றின விபரங்கள் தேவனிடத்திலிருந்து பெறப்படுவதாக சொல்லப்படுகிறது.**



**வேத வசனங்களில் காணப்படுகிற தீர்க்கதரிசனம் என்பதன் விளக்கம் இது தானா ?**

இதற்கான பதிலை பின்வரும் வசனத்தில் நாம் வாசிக்கிறோம்.

**வெளிப்படுத்தல் 19 : 10**

"....இயேசுவைப்பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது என்றான்."

இவ்வசனம் தீர்க்கதரிசனத்தின் உண்மையான விளக்கத்தை நமக்கு தருகிறது. அது –

**"...இயேசுவைப்பற்றின சாட்சி..."** என்று விளக்குகிறது.

**இங்கு, "...இயேசுவைப்பற்றின சாட்சி" என்பது எதைக் குறிக்கிறது ?**

இதற்கான பதிலை இயேசுவிடமிருந்தே நாம் பெறலாம்,

**லூக்கா 24 : 27**

**"மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக்குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார்."**




இங்கு **"மோசே"** என்பது **ஆதியாகமம் / யாத்திராகமம் / லேவியராகமம் / எண்ணாகமம் / உபாகமம்** ஆகிய ஐந்து புத்தகங்களைக் குறிக்கிறது. இவையனைத்தும் மோசே மூலம் எழுதப்பட்டு யூதர்களால் **தோரா** என்று அழைக்கப்படுகிறது.



**இங்கு, வேதமானது மோசே எழுதின ஐந்து புத்தகங்களில் துவங்குவதாக இயேசு உறுதிப்படுத்துவதை தயவு செய்து கவனிக்கவும்.**

இயேசுவை பற்றின சாட்சியானது வேதத்தில்,

- தேவன் – **"நமது சாயலில்....உண்டாக்குவோமாக"** என்று சிருஷ்டிப்பு வேலைகளில் தம்மோடு உடன்சிருஷ்டிகராக இயேசு இருந்ததைக் குறித்து **ஆதியாகமம் 1 : 26**ல் சொல்லியதில் துவங்குகிறது.

- **....ஆதியாகமம் 2 : 17**ல் ஆதாமிடம் பேசுகிற தேவனாகிய கர்த்தர் – **"தேவனுடைய வார்த்தையுமான" (யோவான் 1 : 1)** நமது இயேசுவே ஆவார்.

- ......**யாத்திராகமம் 23 : 20,21** இஸ்ரயேலரின் வனாந்திர பிரயாணத்தில் அவர்களை வழிநடத்துவதற்கு **"ஒரு தூதனை"** அனுப்புவதாக தேவன் பேசுவதை காண்கிறோம். அந்த "தூதன்"

நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என்பதை **1 கொரிந்தியர் 10:4ன்** மூலம் உணருகிறோம்.

மேலும் நாம் வாசிக்கையில்....

**...சிம்சோனின்** பெற்றொரிடத்தில் தோன்றினவரும், **"அதிசயமானவர்"** என்ற பெயரை உடையவருமான தூதனாக **நியாயாதிபதிகள் 13 : 18ம்** வசனத்தில் பதிவாகி உள்ளதை காண்கிறோம். இந்த தூதனும் இயேசுவே ஆவார்.**(ஏசாயா 9 : 6)**

மீண்டும் நாம் வாசிக்கையில் ..........

**"நீங்கள் விரும்புகிற உடன்படிக்கையின் தூதனுமானவர்..."** என்று **மல்கியா 3 : 1**ல் குறிப்பிடப்பட்டிருப்பதை காண்கிறோம். இது இஸ்ரயேலரோடு புதிய உடன்படிக்கையை ஏற்படுத்துகிற மேசியாவை குறிக்கிறது. இந்த "தூதனுமானவர்" நமது இயேசுவே ஆவார்


என்று நாம் சொல்லிக்கொண்டே போகலாம்.....

இறுதியாக, வேதத்தின் கடைசி புத்தகமாகிய **.....வெளிப்படுத்தல்** 22 : 17ல் நாம் வாசிக்கையில் –

**"ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்..."**

இது மகிமையடைந்த சபை அவர்களுடைய தலையும், இராஜாவும் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவோடு இருப்பதைக் குறிக்கிறது.

ஆம், இந்த முழு **வேதமும் தேவனுடைய தெய்வீக திட்டத்தை நிறைவேற்றுகிறவரும், "தேவனுடைய தாசனுமாக" (ஏசாயா 52 : 13) உயர்த்தப்பட்டிருக்கிற "இயேசுவைப் பற்றிய சாட்சியை"** கொண்டுள்ளது.



எனவே,
உண்மையான
தீர்க்கதரிசனம்
உரைப்பது என்பது -

**"இங்கே கொஞ்சமும்.... அங்கே கொஞ்சமுமாக" இருக்கும் வேதத்தின் சத்திய போதனைகளை உபதேசிப்பதேயாகும்.**

இவ்விதமாக, நாம் வாசிக்கையில்,

**அப்போஸ்தலர் 2 : 18**

**"என்னுடைய ஊழியக்காரர்மேலும், என்னுடைய ஊழியக்காரிகள்மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்."**

ஆம், தேவனுடைய தெய்வீக திட்டத்தை பற்றின சத்தியமானது பரிசுத்த ஆவியின் மூலமாக மாத்திரமே வேதவசனங்களில் இருக்கிற பிரகாரம் புரிந்துகொள்ள முடியும் என்பதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம்.

**1 கொரிந்தியர் 2 : 14**

**"ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான், அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும், அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்."**

இங்கு, தெளிவாக கொடுக்கப்பட்டிருப்பதை கவனித்தீர்களா ?

மேலும், கள்ளத்தீர்க்கதரிசிகள் மற்றும் கள்ளபோதகர்களை பற்றி வேதவசனத்தில் நாம் வாசிக்கையில்,

**2 பேதுரு 2 : 1 - 3**

**"கள்ளத்தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள், அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள்; அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப்பண்ணி, தங்களைக் கிரயத்துக்குக்கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக்கொள்ளுவார்கள். அவர்களுடைய கெட்ட நடக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள்; அவர்கள்நிமித்தம் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படும். பொருளாசையுடையவர்களாய், தந்திரமான வார்த்தைகளால் உங்களைத் தங்களுக்கு ஆதாயமாக வசப்படுத்திக்கொள்ளுவார்கள்; பூர்வகாலமுதல் அவர்களுக்கு விதிக்கப்பட்ட ஆக்கினை அயர்ந்திராது, அவர்களுடைய அழிவு உறங்காது."**

ஆம், சபையில் இந்த கள்ளத்தீர்க்கதரிசிகள் அல்லது கள்ளபோதகர்கள் எழுவதைக் குறித்து நாம் தெளிவாக வாசிக்கிறோம்.



**இங்கு, எழும் கேள்வி என்னவெனில் – "ஒரு கள்ளதீர்க்கதரிசி அல்லது கள்ளபோதகரை நாம் எப்படி அடையாளம் காணமுடியும் ?"- என்பதே.**

இதற்கான பதிலை பின்வரும் வசனத்திலே வாசிக்கிறோம்.

**1 யோவான் 4 : 1**

**"பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங்கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்."**

ஆம், கள்ளத்தீர்க்கதரிசிகளை பற்றி அப்போஸ்தலனாகிய யோவான் எச்சரிப்பதோடு மட்டும் அல்லாமல் –

**"அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்"** என்று சகோதரரை அறிவுறுத்துகிறார்.

**இங்கு, "ஆவிகள்" என்று குறிப்பிடப்பட்டிருப்பது என்ன ?**

ஆரம்ப கால வகுப்புகளை நாம் நினைவுக்கூறுகையில் **(பாடம் – 7 – நமது மகா பரிசுத்தமான விசுவாசம்)** நாம் வேதத்தில் "ஆவி" என்பது கண்ணுக்குப் புலப்படாத ஆனால் வல்லமையுள்ளதைக் குறிப்பதாக கண்டோம்.

மேலும், "ஆவி" என்ற வார்த்தைக்கு மூன்று பொருள் இருப்பதை கண்டோம் அவை –

1. **"ஜீவ சுவாசம்" (பிரசங்கி 12 : 7)**
2. **"சிந்தை" (தானியேல் 2 : 1)**
3. **"வார்த்தைகள்"** அல்லது பின்வரும் வசனத்தில் காண்கிறபடி போதனைகளைக் குறிக்கும் –

**யோவான் 6 : 63**

**"ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது."**

எனவே இங்கு "ஆவி" என்பது "வார்த்தைகளை" அல்லது போதனைகளைக் குறிக்கிறது.

**இதன்மூலம், "ஆவிகளை சோதித்தறியுங்கள்" என்று சபையை அப்போஸ்தலனாகிய யோவான் எச்சரிப்பது - ...நாம் பெற்றுக்கொள்கிற போதனைகள் அனைத்தையும் சோதித்து அவைகள் தேவனிடத்திலிருந்தும் அவருடைய வார்த்தையிலிருந்தும் வருகின்றனவா என்று சோதித்து அறிவது அவசியம் என்று உணருகிறோம்.**



அப்போஸ்தலனாகிய யோவான் சபையானது **"...எல்லா ஆவிகளையும் நம்பாமல்..."** இருக்கும்படி தெளிவாக எச்சரிக்கிறார்.

ஆம், இன்று அநேக கள்ளப்போதகர்கள் தோன்றியிருப்பதினால் நாம் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு போதனைகளையும் அவை தேவனிடத்திலிருந்தும் அவருடைய வார்த்தையிலிருந்தும் வருகிறதா என்று சோதித்து பார்ப்பது மிக அவசியமாகும். இதற்கு முன் உதாரணமாக ஆதிகால சபையில் இருந்த கிறிஸ்தவர்களை நாம் காண்கிறோம் –

**அப்போஸ்தலர் 17 : 11**

**"அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுகொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப்பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்."**

**இன்று நீங்களும் நானும் இந்த பெரேயா பட்டணத்தார் போல இருக்கிறோமா ?**

ஆம், ஒருவேளை அப்படிப்பட்டவர்களாக நாம் இருந்தால் கள்ள போதகர்களிடமிருந்து காக்கப்பட்டிருக்கிறோம்.

....இதை தேவனுடைய வார்த்தைகளின் மூலம் அவருடைய உண்மையான தீர்க்கதரிசிகளை அடையாளம் காண்பதின் மூலம் செயல்படுத்தலாம்.




இப்பொழுது நாம் வெளிப்படுத்தின புஸ்தகத்தில் வாசிக்கிற ஒரு "கள்ளத்தீர்க்கதரிசியைக்" குறித்து காணலாம் –

**வெளிப்படுத்தல் 16 : 13 / 19 : 20**

**"அப்பொழுது, வலுசர்ப்பத்தின் வாயிலும் மிருகத்தின் வாயிலும்**

**கள்ளத்தீர்க்கதரிசியின் வாயிலுமிருந்து தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகள் புறப்பட்டுவரக் கண்டேன்.”**

**“அப்பொழுது மிருகம் பிடிக்கப்பட்டது, மிருகத்தின்முன்பாகச் செய்த அற்புதங்களால் அதின் முத்திரையைத் தரித்தவர்களையும் அதின் சொரூபத்தை வணங்கினவர்களையும் மோசம்போக்கின கள்ளத்தீர்க்கதரிசியுங்கூடப்பிடிக்கப்பட்டான், இருவரும் கந்தகம் எரிகிற அக்கினிக்கடலிலே உயிரோடே தள்ளப்பட்டார்கள்.”**

## இந்த “கள்ளத்தீர்க்கதரிசி” யாரைக் குறிக்கும் ?

இது வேதத்திலுள்ள உபதேசங்களை போதிக்கிற போதகர்களாக தங்களை பறைசாற்றி உண்மையில் கள்ள உபதேசங்களை போதிக்கிற கள்ளத்தீர்க்கதரிசியாகிய ஒரு அமைப்பை அடையாளமாகக் குறிக்கிறது.

ஆம், இது ...... **புரோட்டஸ்டன்ட் சபைகளின் ஒருங்கிணைப்பைக்** குறிக்கிற அடையாளத்தைக் குறிப்பதாக இருக்கிறது.

இந்த சபைகளின் “அமைப்பு” மற்றும் அவர்களுடைய “கள்ளக்தீர்க்கதரிசனத்தை” தேவன் பின்வருமாறு குறிப்பிடுகிறார்

**எரேமியா 23 : 21**

**“அந்தத் தீர்க்கதரிசிகளை நான் அனுப்பாதிருந்தும் அவர்கள் ஓடினார்கள், அவர்களோடே நான் பேசாதிருந்தும் அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்.”**

ஆம், இவர்கள் கர்த்தருக்கும் அவருடைய சத்தியத்திற்குமான ஊழியர்களாயிராமல் வேதத்தை தொடர்ந்து,

**....கூட்டங்களிலும் ...பொது இடங்களிலும்**
**....வானொலிகளிலும் .....தொலைக்காட்சிகளிலும்**
போதித்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், இந்த கள்ள தீர்க்கதரிசிகள் மற்றும் கள்ளப் போதகர்களைக் குறித்து தேவன் விவரிப்பதாக நாம் காண்பது என்னவென்றால் –

**எரேமியா 23 : 16,17 / 23 : 30-32**


**“உங்களுக்குத் தீர்க்கதரிசனம் சொல்லுகிற தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைக் கேளாதிருங்கள், அவர்கள் உங்களை வீண்பெருமை**

**கொள்ளும்படி செய்கிறார்கள். கர்த்தருடைய வாக்கை அல்ல, தாங்கள் யூகித்த தரிசனத்தைச் சொல்லுகிறார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் என்னை அசட்டை பண்ணுகிறவர்களை நோக்கி – உங்களுக்குச் சமாதானம் இருக்குமென்று கர்த்தர் சொன்னாரென்று சொல்லுகிறதுமல்லாமல், தங்கள் இருதயத்தின் கடினத்திலே நடக்கிற யாவரையும் நோக்கி – உங்கள்மேல் பொல்லாப்புவராதென்றும் சொல்லுகிறார்கள்."**

**"ஆகையால், இதோ, ஒவ்வொருவராய்த் தன்தன் அயலாரிடத்தில் என் வார்த்தையைத் திருட்டுத்தனமாய் எடுக்கிற தீர்க்கதரிசிகளுக்கு நான் விரோதி என்று கர்த்தர் சொல்லுகிறார். இதோ, தங்கள் நாவின் சொல்லையே வழங்கி – அவர் அதை உரைத்தார் என்று சொல்லுகிற தீர்க்கதரிசிகளுக்கு நான் விரோதி என்று கர்த்தர் சொல்லுகிறார். இதோ, பொய்ச் சொப்பனங்களைத் தீர்க்கதரிசனமாகச் சொல்லி, அவைகளை விவரித்து, என் ஜனத்தைத் தங்கள் பொய்களினாலும், தங்கள் வீம்புகளினாலும், மோசம் போக்குகிறவர்களுக்கு நான் விரோதி என்று கர்த்தர் சொல்லுகிறார், நான் அவர்களை அனுப்பினதுமில்லை, அவர்களுக்குக் கற்பித்ததுமில்லை, அவர்கள் இந்த ஜனத்துக்கு ஒரு பிரயோஜனமாய் இருப்பதுமில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்."**

ஆம், இந்த கள்ளத் தீர்க்கதரிசிகள் "…..கர்த்தருடைய வாக்கை" உரைப்பதாக சொன்னாலும் உண்மையில் அவர்கள் தங்களுடைய "இருதயத்தில் யூகித்த தரிசனத்தைச் சொல்லுகிறார்கள்" என்று கர்த்தர் தாமே வெளிப்படுத்துகிறார்.

**இன்று தொலைக்காட்சிகளிலும்… வானொலிகளிலும்…. கைப்பிரதிகளின் மூலமாகவும்… பொதுக்கூட்டங்களிலும்-**





**“கர்த்தர் எனக்கு <u>இதை</u> சொன்னார்....**

**“கர்த்தர் எனக்கு <u>அதை</u> சொன்னார்....**

**என்று சொல்லுகிறவர்களின்மூலம் இது நமது கண்களுக்கு முன்பாக நிறைவேறுகிறது அல்லவா ?**

இந்த கள்ளத்தீர்க்கதரிசிகள் “பாரத்தை” சுமப்பதாக சொல்லிக்கொள்ளுவதை குறித்தும் கர்த்தர் பேசுவதை பின்வரும் வசனத்தில் காண்கிறோம்.

**வசனம் 38 - “நீங்களோவெனில், கர்த்தரால் சுமரும் பாரம் என்று சொல்லுகிறபடியினாலே – கர்த்தரின் பாரம் என்று சொல்லாதிருங்களென்று நான் உங்களுக்குச் சொல்லி அனுப்பியும், நீங்கள் இந்த வார்த்தையைக் கர்த்தரின் பாரம் என்று சொல்லுகிறீர்களே.”**

ஆம், சில பட்டணங்கள் மற்றும் நகரங்களின் **“இரட்சிப்பிற்காக” இந்த கள்ளத்தீர்க்கதரிசிகள் சுமப்பதாக சொல்லும் “பாரங்கள்”** அனைத்தும் **.....உண்மையல்லாதவைகளாக** இருக்கிறது.

இந்த கள்ளத்தீர்க்கதரிசிகளின் மீதான கர்த்தருடைய இறுதியான நியாயத்தீர்ப்பைக் குறித்து நாம் வாசிக்கையில்,

**எரேமியா 23 : 40**

**“மறக்கப்படாத நித்திய நிந்தையையும், நித்திய இலச்சையையும் உங்கள்மேல் வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.”**

ஆம், இது சம்பவிக்கும் விதத்தைப் பற்றின விபரங்களை வாசிக்கையில்,

**சகரியா 13 : 4 – 6**

**“அந்நாளிலே தரிசனம் சொல்லுகிற அவனவன் தான் சொன்ன தரிசனத்தினால் வெட்கப்பட்டு, பொய்சொல்லும்படிக்கு இனி மயிர்ப்போர்வையைப் போர்த்துக்கொள்ளாமல், நான் தரிசனம் சொல்லுகிறவன் அல்ல, நான் நிலத்தைப் பயிரிடுகிறவன், என் சிறுவயதுமுதல் ஒருவன் என்னை வேலைகொண்டான் என்பான். அப்பொழுது ஒருவன் அவனை நோக்கி – உன் கைகளில் இருக்கிற இந்த வடுக்கள் ஏதென்று கேட்டால், என் சிநேகிதரின் வீட்டிலே காயப்பட்டதினால் உண்டானவைகள் என்பான்.”**

**இது ஒரு விசித்திரமான தீர்க்கதரிசனமாகும்.**

இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள அடையாளங்களின் பொருளை இப்பொழுது காண்போம்.

**"நான் தரிசனம் சொல்லுகிறவன் அல்ல, நான் நிலத்தைப் பயிரிடுகிறவன்"**

இது அந்நாட்களில் இந்த **"போதகர்கள்"** மற்றும் **"தீர்க்கதரிசிகள்"** உணர்வுக்கு வருவதைக் குறிப்பிடுகிறது. அவர்கள் .....ஆவிக்குரியவர்களாக இல்லாமல் பூமிக்குரிய மாம்சீக சிந்தையோடு இருந்ததை உணர்வர்.

ஒரு "பயிரிடுகிறவன்" அல்லது விவசாயி விதை விதைத்து, நிலத்திலிருந்து பலனை எதிர்ப்பார்த்து காத்திருப்பது போல இந்த "தீர்க்கதரிசிகளும்" தங்களுடைய **"சுவிசேஷ ஊழியத்தை" பூமிக்குரிய லாபங்களுக்காகவும், செல்வங்களுக்காகவும், கட்டிடம், செல்வம், வாகனம், பெயர், புகழ்** போன்றவற்றை "கர்த்தருடைய ஊழியத்தின்" பெயரில் பெறவே செய்கிறார்கள்.



. ஆம், அவர்கள் தங்களை
**“நான் தரிசனம் சொல்லுகிறவன் அல்ல....”**
என்று ஒப்புக்கொள்வார்கள்.

**“....என் சிறுவயதுமுதல் ஒருவன் என்னை வேலைகொண்டான்....”**

இது அவர்கள் “பாவ மனிதனாகிய” அந்திக்கிறிஸ்து அமைப்புகளின் மூலமும், வேதாகம கல்லூரிகளின் மூலமும் பயிற்றுவிக்கப்பட்டதை ஒப்புக்கொள்வதைக் குறிக்கிறது.




இங்கு அவர்கள் சுவிசேஷ ஊழியம் மற்றும் சபைகளை எவ்வாறு நடத்த வேண்டும் என்பது பற்றி போதிக்கப்பட்டு நிர்வாகத்திலும், நிதி நிர்வகிப்பதிலும் பயிற்சியளிக்கப்படுகிறார்கள்.

**மாறாக, தேவனுடைய வார்த்தையாகிய சத்தியத்தில் பயிற்சியளிக்கப்படுவதில்லை.** ஆம், அவர்கள் தாங்கள் ஒருபோதும் ஆவிக்குரியரீதியில் பயிற்சியளிக்கப்படாததை ஒப்புக்கொள்வார்கள்.

**“...என் சிநேகிதரின் வீட்டிலே காயப்பட்டதினால் உண்டானவைகள்...”**

ஆம், இது அந்த “தீர்க்கதரிசிகள்” மற்றும் “போதகர்கள்” தங்களுடைய “சிநேகிதரிடமிருந்து” - **அவர்களுக்கு ஆதரவளித்து கனப்படுத்திய அதே ஜனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்போகிற தீவிரமான நியாயத்தீர்ப்பைக்** குறிக்கிறது.

**ஆம், அது இந்த கள்ள அமைப்பு மற்றும் அதன் கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கும் சம்பவிக்கப்போகிற ஒரு பயங்கரமான முடிவாக இருக்கும்.**

இப்பொழுது நாம் பரிசுத்த ஆவியின் கடைசியான "வரம்" குறித்து காண்போம்.

## தரிசனம் பார்த்தல்

"தரிசனங்கள்" என்பது சில முக்கியமான ஆவிக்குரிய காரியங்களை அறிவிக்க தேவன் பயன்படுத்துகிற காணக்கூடிய காட்சிகளாகும். உதாரணம் -

**இயேசு கிறிஸ்துவின் மறுரூபக் காட்சி (மத்தேயு 17 : 1-9)**

மற்றும்....பின்வரும் வசனத்தில் வாசிக்கிற பேதுரு கண்ட தரிசனம்.

**அப்போஸ்தலர் 10 : 11-17**

**"வானம் திறந்திருக்கிறதாகவும், நாலுமுனைகளும் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப்போல ஒருவிதமான கூடு தன்னிடத்தில் இறங்கித் தரையில் விடப்பட்டிருக்கிறதாகவும், அதிலே பூமியிலுள்ள சகலவிதமான நாலுகால் ஜீவன்களும், காட்டுமிருகங்களும், ஊரும் பிராணிகளும், ஆகாயத்துப் பறவைகளும் இருக்கிறதாகவும் கண்டான். அல்லாமலும் – பேதுருவே, எழுந்திரு, அடித்துப் புசி என்று அவனுக்குச் சொல்லும் ஒரு**



**சத்தம் உண்டாயிற்று. அதற்குப் பேதுரு – அப்படியல்ல, ஆண்டவரே, தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றையும் நான் ஒருக்காலும் புசித்ததில்லை என்றான். அப்பொழுது தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே என்று இரண்டாந்தரமும் சத்தம் அவனுக்கு உண்டாயிற்று. மூன்றாந்தரமும் அப்படியே உண்டாயிற்று, பின்பு அந்தக் கூடு திரும்ப வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்பொழுது பேதுரு, தான் கண்ட தரிசனத்தைக்குறித்துத் தனக்குள்ளே சந்தேகப்படுகையில், இதோ, கொர்நேலியுவினால் அனுப்பட்ட மனுஷர்கள் சீமோனுடைய வீட்டை விசாரித்துக்கொண்டு வாசற்படியிலே வந்து நின்று....”**

இது போல பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடுகளில் இன்னும் அநேகர் தரிசனங்கள் பதிவாகி உள்ளது.

ஆனால், இந்த தரிசனங்கள் என்பது இந்நாளில்

- **கர்த்தராகிய இயேசு காட்சியளித்து அந்த நபர்களிடம் பேசுவதையும்**
- **அல்லது....... பரிசுத்த ஆவியானவர் என்ற நபரை சந்திப்பதாகவும்**
- **அல்லது... பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, நரகத்திற்கு சென்று பார்ப்பதாகவும் புரிந்துகொள்ளப்படுகிறது.**

**இவையனைத்தும், வசனத்தின் அடிப்படையில் உண்மையா ?**

இந்த காரியங்களை இப்பொழுது நாம் ஒவ்வொன்றாகக் காண்போம்.

## 1. இயேசு காட்சியளித்தல் அல்லது அவருடைய “தரிசனங்கள்”



## அப்போஸ்தலர் 9 : 5 – 9

**“அதற்கு அவன் – ஆண்டவரே, நீர் யார், என்றான் அதற்குக் கர்த்தர் – நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே.... அவன் நடுங்கித் திகைத்து, ஆண்டவரே, நான் என்னசெய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குக் கர்த்தர் – நீ எழுந்து, பட்டணத்துக்குள்ளே போ, நீசெய்யவேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார். அவனுடனேகூடப் பிரயாணம்பண்ணின மனுஷர்கள் சத்தத்தைக் கேட்டும் ஒருவரையும் காணாமல் பிரமித்து நின்றார்கள். சவுல் தரையிலிருந்தெழுந்து, தன் கண்களைத் திறந்தபோது ஒருவரையுங்காணவில்லை. அப்பொழுது கைலாகுகொடுத்து, அவனைத் தமஸ்குவுக்குக் கூட்டிக்கொண்டுபோனார்கள். அவன் மூன்று நாள் பார்வையில்லாதவனாய்ப் புசியாமலும் குடியாமலும் இருந்தான்.”**

இங்கு, கர்த்தராகிய இயேசுவை அவருடைய தற்போதைய மகிமையின் நிலையில் கடைசியாக பார்த்தவர் தர்சு பட்டணத்தின் சவுல் என்பதை அறிவோம்.

ஆம், அவர் குருடாக்கப்பட்டு மூன்று நாட்களுக்கு புசிக்கவும், குடிக்கவும் முடியாமல் போனதை அறிவோம்.

### இதற்கு என்ன காரணம் ?

அப்போஸ்தலனாகிய பவுலிடம் இதற்கான பதிலை பெறுவோம்.


## அப்போஸ்தலர் 26 : 13

**“மத்தியான வேளையில், ராஜாவே, நான் வழியிலே சூரியனுடைய பிரகாசத்திலும் அதிகமான ஒளி வானத்திலிருந்து என்னையும் என்னுடனேகூடப் பிரயாணம்பண்ணினவர்களையும் சுற்றிப் பிரகாசிக்கக்கண்டேன்.”**



### பார்த்தீர்களா ?

கர்த்தராகிய இயேசு காட்சியளித்தது, சூரியனுடைய பிரகாசத்திலும் அதிகமான ஒளியாக – கண்களை கூசச்செய்கிற ஒளியாக இருந்தது.



**தேவனுடைய மிகப் பெரிய ஊழியனுக்கே இப்படிப்பட்ட அனுபவம் நேர்ந்திருக்க, இன்றைய தீர்க்கதரிசிகள் மற்றும் போதகர்கள் கர்த்தரை தரிசனத்தில் கண்டும் அவர்களுக்கு ஒன்றும் சம்பவியாமலிருப்பது எப்படி ?**

அப்போஸ்தலனாகிய பவுல் கண்ட காட்சி அவருக்கு பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தியிருக்க இன்றைய தீர்க்கதரிசிகள் மற்றும் போதகர்கள் காண்கிற தரிசனங்கள் மாத்திரம்.....

**இவ்வளவு சாதாரணமாகவும், பாதிப்பில்லாததுமாக இருப்பது ஏன் ?**

**ஒருவேளை இன்றைய தீர்க்கதரிசிகள் மற்றும் போதகர்கள் அப்போஸ்தலனாகிய பவுலைக் காட்டிலும் பெரியவர்களாக இருக்கக்கூடுமோ ?**

தொடர்ந்து நாம் காண்கையில்....

## 2. பரிசுத்த ஆவியானவர் என்ற நபரை சந்திக்கிற "தரிசனங்கள்"

ஏற்கனவே நாம் தெளிவாக பார்த்திருக்கிறபடி **(பாடம் – 23 – திரித்துவம் – பாகம் – 1)** தேவனுடைய பரிசுத்த ஆவி என்பது கர்த்தராகிய இயேசு நமக்கு போதித்திருக்கிறபடி –

**லூக்கா 24 : 49**

**"என் பிதா வாக்குத்தத்தம்பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்."**

ஆம், பரிசுத்த ஆவி என்பது..... **"உன்னதத்திலிருந்து வரும் பெலன்"**

**....தேவனுடைய கண்ணுக்கு தெரியாத, அளவிடமுடியாத வல்லமையாகும்.**

மாறாக, **"திரித்துவ"** போதனையில் உபதேசிக்கிறபடி வேதவசனங்களில் காணப்படாததும்.... **"பிசாசுகளின் உபதேசத்தின்படி" (1 தீமோத்தேயு 4 : 1)** அது ஒரு நபர் அல்ல.

இறுதியாக நாம் காண்பது...

## 3. பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, நரகத்தையும் "தரிசித்தல்"

பின்வரும் வசனத்தை நாம் வாசிக்கையில்,

**1 கொரிந்தியர் 15 : 50**

**“சகோதரரே, நான் சொல்லுகிறதென்னவெனில், மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது...”**


ஆம், மனித ரூபத்தில் இருக்கிற ஒருவரும் பரலோகத்திற்கு ஒருபோதும் போகமுடியாது. ஆனாலும் சிலர் பின்வரும் வசனத்தை மேற்கோள் காட்டி வாதம் செய்கிறார்கள்.

**2 கொரிந்தியர் 12 : 2**

**“கிறிஸ்துவுக்குள்ளான ஒரு மனுஷனை அறிவேன், அவன் பதினாலு வருஷத்திற்கு முன்னே மூன்றாம் வானம்வரைக்கும் எடுக்கப்பட்டான், அவன் சரீரத்திலிருந்தானோ, சரீரத்திற்குப் புறம்பேயிருந்தானோ, அதை அறியேன், தேவன் அறிவார்.”**

இவ்வசனமானது, “பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது” சம்மந்தமான அனைத்து அனுபவங்களையும் நியாயப்படுத்துகிற ஆதார வசனமாக பயன்படுத்தப்படுகிறது.

ஆனால், இங்கு நாம் கவனிக்கையில் “மூன்றாவது வானம்” என்று வசனம் 4-ல்



**“அந்த மனுஷன் பரதீசுக்குள் எடுக்கப்பட்டு...”**

என்று சொல்லப்பட்டிருப்பது சிலுவையிலிருந்து கள்ளனுக்கு இயேசு வாக்களித்த அதே “பரதீஸ்” என்பதை அறிவோம்.



**லூக்கா 23 : 43**

**- "இயேசு அவனை நோக்கி – இன்றைக்கு நீஎன்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்."**

ஆம், இயேசுவிடமிருந்து ஆசீர்வாதமாக கள்ளன் எதிர்பார்த்த **இந்த பரதீஸ்... தேவனுடைய இராஜ்யமேயாகும்.**

இது, **"நீதி வாசமாயிருக்கும்" (11 பேதுரு 3 : 13)** மூன்றாவது உலகமும், அப்பொழுது **உலகம் ஏதேன் தோட்டத்தை போல சீர்பொருந்தப்பட்டு** – **ஒரு "பரதீஸ்"** போல இருப்பதாக வாசிக்கிறோம்.

**யோவேல் 2 : 3**

**"அவைகளுக்கு முன்னாக அக்கினி பட்சிக்கும் அவைகளுக்குப் பின்னாக ஜுவாலை எரிக்கும், அவைகளுக்கு முன்னாகத் தேசம் ஏதேன் தோட்டத்தைப்போலவும், அவைகளுக்குப் பின்னாகப் பாழான வனாந்திரத்தைப் போலவும் இருக்கும், அவைகளுக்கு ஒன்றும் தப்பிப்போவதில்லை."**

இது இரண்டாம் உலகத்தின் முடிவுக்கு பின்பு **இஸ்ரயேல் தேசத்தில் தேவனுடைய இராஜ்யத்தின் கண்ணுக்கு தெரிகிற பாகம்** வருவதைக் குறிப்பதாகும்.

**ஆம், "....அவைகளுக்கு முன்னாகத் தேசம் ஏதேன் தோட்டத்தைப்போல...." இருக்கும்.**

மேலும், ஆத்துமாக்கள் நித்தியத்திற்கும் அக்கினியில் வதைக்கப்படுகிற வேதனை ஸ்தலமாகிய நரகத்தைப் பற்றின "தரிசனத்தைக்" குறித்த போதனைகள்.... வேதத்தில்

வேதம் ஆத்துமாக்கள் நரகத்தில் அழிக்கப்படுவதாக போதிக்கிறது.

**மத்தேயு 10 : 28**

**"ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம், ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்."**

இறுதியாக, இந்த காரியங்கள் அனைத்தையும் குறித்த பெயர்

சபையின் **போதனைகள் முற்றிலும் தவறானதும், தேவனுடைய வார்த்தைகளில் போதிக்கப்படாததும், வேதத்தில் காணப்படாததுமாக** இருக்கிறதை நாம் கண்டோம்.

எனவே, இக்காரியங்கள் அனைத்தையும் குறித்த கர்த்தருடைய வார்த்தைகளாக நாம் இன்று கண்டறிந்ததின் மூலம் நிறைவு செய்வோம்.

## எரேமியா 14 : 14


**"அப்பொழுது கர்த்தர் என்னை நோக்கி - தீர்க்கதரிசிகள் என் நாமத்தைக்கொண்டு பொய்யாய்த் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறார்கள். நான் அவர்களை அனுப்பினதுமில்லை, அவர்களுக்குக் கற்பித்ததுமில்லை, அவர்களோடே பேசினதுமில்லை, அவர்கள் கள்ளத்தரிசனத்தையும், கள்ள சகுனத்தையும் இல்லாத விசேஷத்தையும், தங்கள் இருதயத்தின் கபடத்தையுமே, உங்களுக்குத் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார்கள்."**

ஆம், நம்மை விடுதலை செய்த....

**தேவனுடைய சத்தியத்திற்காக அவருக்கு நாம் நம்முடைய நன்றிகளை ஏறெடுப்போம்.**

# ...ஆமென்...

For Private Circulation Only




NOT FOR SALE

For more Subjects contact: MESSENGERS OF CHRIST  E-mail: thekingdom1_6@yahoo.com